# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.95/2023 நாள் : 04.12.2023**

**<u>சென்னை குடிநீர் வாரியத்தின் 325 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகளை தொய்வின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.</u>**

**<u>மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்</u>**

இன்று (04.12.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், சிந்தாதிரிப்பேட்டையில், சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

பின்னர் தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 325 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடுகள் அலுவலர்களால் தொடர்ந்து தீவிரமாக கள ஆய்வு செய்யப்பட்டு கழிவுநீரகற்றும் பணிகள், மழைநீரை அகற்றுதல் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை அகற்றும் பணிகள் துரிதமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நிலையங்களில் உள்ள ஜெனரேட்டர்கள் நல்ல நிலையில் இயங்குவதை உறுதி செய்து நிலையத்தின் செயல்பாடுகள் தொய்வின்றி மேற்கொள்ளப்படுவதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும், ஜெனரேட்டர்கள் மற்றும் பிற இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருளை கண்டிப்பாக இருப்பில் வைத்திருக்க வேண்டும். கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும்

அடைப்புகளை சரி செய்வதற்கான தூர்வாரும் இயந்திரங்கள், அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், ஜெட்ராடிங் வாகனங்கள் என அனைத்து கழிவுநீரகற்றும் இயந்திரங்களும் தொய்வின்றி பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களின் பாதுகாப்பை அதிகாரிகள் கண்காணித்திட வேண்டும்.

மழைநீர் தேங்கிய பகுதிகளில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் தேவையான அளவு குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டு அதை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் பொதுமக்களுக்கு களப்பணியாளர்களால் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். மேலும், சாலைகளில் உள்ள மழைநீர், குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள கழிவுநீரை விரைந்து அகற்றுதல் வேண்டும். குடிநீர் விநியோக நிலையங்களில்(WDS) நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர்களைக் கொண்டு தேங்கும் மழைநீர் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

மேலும், பொதுமக்கள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் தொடர்பான புகார்கள் தெரிவிப்பதற்கு ஏதுவாக சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை 044-4567 4567 (20 இணைப்புகள்) மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்.1916-ல் தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater